**தேயிலை சக்தி நிதியம் - 2017**

தேயிலை சக்தி நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த இரண்டு ஆண்டுகளுக்கான செயற்பாட்டு நடவடிக்கை தொடர்பாக 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2000 இன் 47 ஆம் இலக்க, தேயிலை சக்தி நிதிய அதிகாரச்சட்டத்தின் 13(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(6) பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளிற்கான நிதிக்கூற்றுக்கள் இவ்வறிக்கைத் திகதிவரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். என நான் கருதும் மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானிப்பதற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்களையும் வரைபு ஆண்டறிக்கையையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் நிதிக் கூற்றுகளும் வரைபு ஆண்டறிக்கையும் 2018 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2 கணக்கேடுகளையும் பதிவேடுகளையும் பராமரித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நடவடிக்கைகள் சம்பந்தமான பேரேட்டுக் கணக்குகள், ஏனைய ஏடுகள் மற்றும் பதிவேடுகள் நாளது வரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் உள்ளமை

கடந்த இரண்டு ஆண்டுகளில் நிதியத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் விபரம் பின்வருமாறாகும்.

| விபரம் | 2015.12.31 இல் உள்ளவாறு | 2014.12.31 இல் உள்ளவாறு |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| **சொத்துக்கள்** | | |
| நடைமுறையற்ற சொத்துக்கள் | 350,332,493 | 371,065,477 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 346,460,128 | 387,410,204 |
| **பொறுப்புக்கள்** | | |
| உரிமை மூலதனம் | (111,648,540) | (72,416,249) |
| நடைமுறையற்ற பொறுப்புக்கள் | 481,088,651 | 506,875,158 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 327,352,510 | 324,016,772 |
| விற்பனைகள் | 573,519,262 | 621,589,674 |
| விற்பனைக் கிரயம் | (552,517,570) | (611,323,143) |
| மொத்த இலாபம் | 21,001,692 | 10,266,531 |

**2.4 நிறுவனம் தொடர்ச்சியாக நிலைத்திருத்தல்**

தேயிலை சக்தி நிதியம் கடந்த 5 ஆண்டுகளுள் தொடர்ச்சியாக நட்டம் அடைந்திருந்ததுடன் நிதியத்தின் உரிமை மூலதனம் படிப்படியாக குறைவடைந்து காணப்பட்டது. அதற்கிணங்க 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 553.04 மில்லியன் தொகையான உரிமை மூலதனம் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 111.65 மில்லியன் மறைப் பெறுமதியைக் காட்டியிருந்தது. இந் நிலைமையின் அடிப்படையில் 2016 யூலை 13 ஆந் திகதி 16/1427/726/015-1 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் தேயிலை சக்தி நிதியத்தின் பணிப்பாளர்கள் சபையின் நடவடிக்கைகள் அத்திகதியிலிருந்து கைவிடப்பட்டு அதன் நடவடிக்கைகள் தோட்டக் கைத்தொழில் அமைச்சின் செயலாளருக்கு ஒப்படைக்கப்பட்டு 09 பிரேரணைகளை உள்ளடக்கிய ஒரு வேலைத்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டு நிதியத்தை மறுசீரமைப்பதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

**2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

பின்வரும் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 386(3) | எழுதப்படுகின்ற அனைத்து காசோலைக்காகவும் அடியிதழில் வவுச்சர் இலக்கம் குறிப்பிடப்பட வேண்டிய போதிலும் இதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 395(ஆ) | ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும் உள்ள கொடுக்கல்வாங்கல்கள் சம்பந்தமாக அடுத்து வரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்தின் 07 வங்கி கணக்குகள் தொடர்பாக வங்கி கணக்கிணக்க கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (iii) | நிதிப்பிரமாணம் 396 | செல்லுபடியாகும் காலம் முடிவடைந்து செலுத்த வேண்டியிருந்த 06 மாதங்களுக்கு மேல் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் சம்பந்தமாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 15,534 மொத்தப் பெறுமதியான 06 காசோலைகள் சம்பந்தமாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை. | ரூபா 4,565,247 தொகையான கணனி மற்றும் மென்பொருட்களுக்காக நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2.6 போதிய அதிகாரத்தால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

2016 யூலை 13 ஆந் திகதிய அமப/16/1224/726/015-1 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நிதியம் தொடர்பாக இடம்பெறுகின்ற எதிர்கால நடவடிக்கைகள் சம்பந்தமாக தோட்டக் கைத்தொழில் அமைச்சின் செயலாளர் மற்றும் நிதி அமைச்சின் செயலாளரால் தீர்மானம் எடுத்தல் இடம் பெற வேண்டிய போதிலும் 2016 செப்தெம்பர் 27 ஆந் திகதியிலிருந்து அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கு நிதி அதிகாரத்தை ஒப்படைப்பதற்காக அமைச்சின் செயலாளரால் நிதி அமைச்சின் செயலாளரின் சம்மதம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.7 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதி சமர்ப்பித்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் தெரணியகல தேயிலைத் தொழிற்சாலையின் தேயிலைக் கொழுந்திற்காக வழங்குனருக்கு செலுத்த வேண்டிய பணம் ரூபா 1,870,576 ஆக இருந்த போதிலும் 2016 ஆம் ஆண்டின் போது அதற்காக ரூபா 3.235,085 பணம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) புலத்கொழுஹீபிடிய மற்றும் பொது பிடிய தேயிலைத் தொழிற்சாலைகளை நிர்மாணித்தல் 2003 ஆம் ஆண்டில் நிறுத்தப்பட்டிருந்தும் அத்தொழிற்சாலைகளை நிர்மாணிப்பதற்காக 2001 ஆம் ஆண்டின் போது ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 18,042,351 மொத்த தொகை முற்பணங்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

# 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 செயலாற்றல்

### 3.1.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தின் எதிர்கால இலக்கு சம்பந்தமாக தந்திரோபாயங்களை உள்ளடக்கிய கூட்டினைந்த திட்டம் தயாரிக்கப்பட வேண்டியதுடன் சுற்றிக்கையின் 5.1.3 ஆம் பந்தியின் பிரகாரம் கூட்டினைந்த திட்டத்தின் நாளதுவரையாக்கிய பிரதியை ஒவ்வொரு நிதி ஆண்டும் ஆரம்பிப்பதற்கு ஆகக் குறைந்தது 15 நாட்களுக்கு முன்னர் அராசங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தியின் பிரகாரம் ஒழுங்குபடுத்தும் நிறுவனத்தால் அதிகாரச் சட்டத்தில் பணிக்கப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான செயற்பாடுகளை உள்ளடக்கிய செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.1.2 செயல் நடவடிக்கையும் மீளாய்வும்

அதிகாரச் சட்டத்திலுள்ள குறிக்கோள்களை நிறைவேற்றுவது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்திற்குச் சொந்தமான 15 தொழில்சாலைகளில் 03 தொழிற்சாலைகள் குத்தகை அடிப்படையில் வெளி நபர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் செயற்பட்டுக்கொண்டிருந்த 10 தொழிற்சாலைகள் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 88,770,617 நட்டம் அடைந்திருந்தது.

(ஆ) நலன்புரி பிரிவு சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. மீள்கட்டமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் தொழிற்சாலைகளை குத்தகைக்கு வழங்குவதன் மூலம் பெற்றுக்கொள்ளப்படுகின்ற வருமானத்திலிருந்து பங்குதாரர்களுக்கு நலன்களை வழங்குதல் மற்றும் நலன்புரி காப்புறுதி நிதியத்திலிருந்து தொழிற்சாலைகளின் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்ட ரூபா 135 மில்லியன் பணத்தை மீண்டும் அந்த நிதியத்திற்கு வழங்க வேண்டிய போதிலும் 2017 திசெம்பர் 31 வரை அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் நலன்புரி நிதியம் சிறிய தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒப்படைத்தல் மாத்திரம் இடம்பெற்றிருந்தது.

ii. 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேயிலை சக்தி நிதியத்தின் பங்குதாரர்களின் எண்ணிக்கை 94,425 ஆக இருந்ததுடன் அத்திகதியில் உள்ளவாறு பங்கு மூலதனம் ரூபா 206,014,150 ஆகும். இப்பங்குதாரர்களுக்காக 2007 ஆம் ஆண்டின் பின்னர் இன்று வரை நலன்களைச் செலுத்தக்கூடிய வகையில் நிதியம் செயற்பட்டிருக்கவில்லை. அங்கத்துவ பங்குதாரர்கள் மற்றும் சிறிய தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் பங்கு மூலதனப் பெறுதியை அதிகரிப்பதன் மூலம் பொருளாதார சமூக அபிவிருத்திக்கு அர்பணிப்புச் செய்த சிறந்த நிறுவனமாக மாறுதல் நிறுவனத்தின் தூர நோக்காக இருந்த போதிலும் மேலே குறிப்பிட்ட விடயங்களின் பிரகாரம் அக்குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.

## 3.2 நிறுவனத்திற்கு எதிராக அல்லது நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட சம்பவங்கள்

2017 திசெம்பர் 31 வரை தேயிலை சக்தி நிதியத்திற்கு எதிராக பதவியணியினரால் தொழில் நீதிமன்றத்தில் 79 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

## 3.3 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 யூலை 13 ஆந் திகதிய 16/1427/726/015-I ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் தேயிலை சக்தி நிதியத்திற்குச் சொந்தமான 12 தொழிற்சாலைகளை முகாமைத்துவ குத்தகை அடிப்படையில் வெளித்தரப்பினர்களுக்கு ஒப்படைப்பதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும், தொழிற்சாலைகளை குத்தகை அடிப்படையின் கீழ் வழங்கும் போது மேற்கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் சில தொழிற்சாலைகள் காணிகளுடன் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) ரயிகம் கெரலே தேயிலை சக்தி தொழிற்சாலையை திக்ஹேன சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்திச் சங்கத்திற்கு 2016 மே 09 ஆந் திகதி 172 ஆவது முகாமைத்துவ சபை கூட்டத்தின் தீர்மானத்தின் பிரகாரம் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. 2016 யூன் 10 ஆந் திகதி இரு தரப்பினர்களும் கையொப்பமிட்ட இலக்கமற்ற குத்தகை உடன் படிக்கையானது காணிப் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், குத்தகை உடன்படிக்கை மற்றும் உடன்படிக்கையின் 2 ஆம் பந்தியின் பிரகாரம் மீளச் செலுத்தும் முற்பணமாக குத்தகைக்குப் பெற்ற தரப்பினரால் 06 மாத குத்தகையாக ரூபா 1,500,000 தொகையை குத்தகைக்கு வழங்கிய தரப்பினருக்கு செலுத்த வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) குத்தகைக்குப் பெற்றவரால் அந்த 09 தொழிற்சாலைகளுக்காகவும் வைப்புச் செய்யப்பட்ட மீளச் செலுத்தக் கூடிய 06 மாத கால குத்தகைப் பணமான ரூபா 23,265,000 தொகையை முதலீடு செய்வதற்கு 15 நாட்களிலிருந்து 239 நாட்கள் வரை தாமதித்ததன் காரணமாக ரூபா 632,485 தொகையான வட்டியை நிதியம் இழந்திருந்தது.

(ஈ) தொழிற்சாலையை குத்தகைக்கு வழங்கும் போது செய்து கொள்ளப்பட்ட குத்தகை உடன்படிக்கை மற்றும் புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் அறவிட வேண்டிய முகாமைத்துவக் கட்டணம் / மாதாந்த குத்தகைப் பணம் அந்த உடன்படிக்கையில் காட்டப்பட்டுள்ள 2 ஆவது நிபந்தனையின் பிரகாரம் கையொப்பமிட்ட திகதியிலிருந்து கணிப்பீடு செய்வதாக குறிப்பிடப்பட்டிருந்ததுடன் தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பித்தல் தாமதமடையும் சந்தர்ப்பங்களில் குத்தகைப் பணத்தை செலுத்துவதற்கு 02 மாத சலுகைக் காலத்தை வழங்குமாறு 03 ஆவது நிபந்தனையில் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், சலுகைக் காலத்திற்காக குத்தகைப் பணம் அறவிடப்படுவதில்லை என குறிப்பிடப்படாதிருந்த போதிலும் எந்த தொழிற்சாலைகளையும் குத்தகைக்கு பெற்றவரினால் சலுகைக் கால எல்லைக்காக குத்தகைப் பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க சலுகைக்கால எல்லைக்காக பின்வருமாறு 11 தொழிற்சாலைகள் மற்றும் பசனைக் களஞ்சியம் சம்பந்தமாக ரூபா 10,845,700 தொகையான மாதாந்த குத்தகைப் பணம் தேயிலை சக்தி நிதியத்தால் இழக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டு காலப்பகுதிக்காக 05 தொழிற்சாலைகளின் ரூபா 7,280,000 மாதாந்த குத்தகைப் பணம் இவ்வறிக்கைத் திகதி வரை நிலுவையாகக் காணப்பட்டிருந்தும் உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) தொழிற்சாலைகளை குத்தகைக்கு வழங்குவது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட குத்தகை உடன்படிக்கைகளின் 07 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட முறையில் மாதாந்தம் தேயிலை கொழுந்து இயலளவிற்கு ஒத்த பெறுமதிக்கு தேயிலை சக்தி நிதியத்தின் பெயரில் வங்கி பிணையை அல்லது காப்புறுதி பூட்கையை வழங்க வேண்டிய போதிலும் 11 தொழிற்சாலைகளை குத்தகைக்கு வழங்கும் போது இப்பிரிவிற்கு இணங்க வழங்க வேண்டிய ரூபா 156,610,200 பெறுமதியான பிணையைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

நிதியத்தின் தலைமை அலுவலகத்தையும் அனைத்து தொழிற்சங்கங்களையும் ஒன்றினைத்து கணக்குகளைத் தயாரிப்பதற்காக ரூபா 2,435,000 பெறுமதியான கணனி மென்பொருள் முறைமை ஒன்று 2010 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்தும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை கணக்குகளைத் தயாரிக்கும் நடவடிக்கைகளுக்காக அம்முறைமை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 366,836 மொத்த தொகையான மிகைக் கட்டணங்களும் நீதிமன்ற தண்டப்பணங்களும் மற்றும் 590,069 நானாவித தண்டப்பணங்களும் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) தேயிலைத் தொழிற்சாலைகள் மின்சாரப் பட்டடியல்களை தாமதித்து செலுத்துவதன் காரணமாக தாமதத்திற்கான வட்டியும் துண்டிக்கப்பட்ட இணைப்புக்களை மீள வழங்குவதற்கான கட்டணமாக ரூபா 108,356 தொகையை நிதியம் செலுத்தியிருந்தது.

### 3.6 ஆளணி நிர்வாகம்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேயிலை சக்தி நிதியத்தில் சேவையில் ஈடுபட்டிருந்த 83 ஊழியர்களுக்கு மத்தியில் 10 ஊழியர்கள் அமைச்சின் கீழ் காணப்படுகின்ற ஏனைய நிறுவனங்களுக்கு இணைத்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன் எட்டுப் பேர் நிதியத்தின் நடவடிக்கைகளுக்காக ஈடுபட்டிருந்தனர். அ.ம.ப/16/2550/726/015-III ஆம் இலக்க 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் 65 ஊழியர்களின் கோவை முடிவுறுத்தப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேயிலை சக்தி நிதியத்தை தோற்றவிக்கும் போது சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் காணப்பட்ட தொழிற்சாலைகள் பொறுபேற்கப்பட்டிருந்ததுடன் அத்தொழிற்சாலைகளில் சேவையாற்றிய பதவியணியினரின் முன்சேவைக் காலத்தை கணிக்கும் போது தேயிலை சக்தி நிதியத்தின் கீழ் சேவையாற்றிய காலம் மாத்திரம் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டதன் காரணமாக 2016 மார்ச் 08 ஆந் திகதிய 02/2016 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 17 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 7,409,660 இழப்பீடு குறைத்து கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இழப்பீட்டுத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட 2016 திசெம்பர் 31 ஆந் திகதி சேவையில் இல்லாதிருந்த மஹாவலி தொழிற்சாலையின் கனிஷ்ட உதவி தொழிற்சாலை உதவியாளருக்கு மற்றும் தொழிற்சாலை மேற்பார்வையாளருக்கு ரூபா 1,849,669 மொத்த தொகையான இழப்பீடு செலுத்தப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 பெறுகைகளும் ஒப்பந்த நடைமுறையும்

#### 4.1.1 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

தேயிலை சக்தி நிதியத்திற்குச் சொந்தமான தொழிற்சாலைகளை குத்தகைக்கு வழங்குவது சம்பந்தமான 2016 யூலை 13 ஆந் திகதிய அமப/16/1224/726/015-I ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் 12 தொழிற்சாலைகள் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன. இது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) நிதிப் பிரமாணம் 774 இன் பிரகாரம் அரசாங்கத்திற்குச் சொந்தமான ஆதனங்களை அல்லது சலுகைகளை விற்பனை செய்யும் போது அரசாங்கத்தின் கேள்வி நடைமுறைகளைப் பின்பற்றி விற்பனையாளர்கள் / குத்தகைதாரர்கள் தெரிவு செய்யப்பட வேணடிய போதிலும் அதற்கு முரணாக நிதியத்திற்கு சொந்தமான ரயிகம கோரலே தேயிலைத் தொழிற்சாலை நேரடியாக சிறு தேயிலை தோட்ட அபிவிருத்திச் சங்கத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் தொழிற்சாலையின் பதில் முகாமையாளராக உள்ளதுடன் நிதியத்தின் முகாமைத்துவ சபையின் பணிப்பாளராகவும் இருந்தார்.

(ii) தொழிற்சாலைகள் மற்றும் ஆதனங்களை குத்தகைக்கு வழங்குதலை ஆரம்பிப்பதற்கு முன்னர் அத் தொழிற்சாலைகளின் சொத்துக்கள் இனங்காணப்பட்டு மதிப்பீடு செய்தல் மற்றும் வருமானத்திற்கான நிதி மூலங்களை மதிப்பீட்டில் உள்ளடக்கி கால அட்டவணை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) குத்தகைக்கு வழங்கும் நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கு முன்னர் தொழிற்சாலைகளின் நிலைமை மற்றும் செயற்பாடுகள் தொடர்பாகவும் அபிவிருத்தி தேவைப்பாடு தொடர்பாகவும் ஆய்வு செய்து அத்தொழிற்சாலைகளிலிருந்து கிடைக்க கூடிய குத்தகை வருமானத்தையும் குத்தகைக்குப் பெறுபவர்களிடம் இருக்க வேண்டிய நிதித் தகைமைகள் தொடர்பாகவும் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

**4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

நிதியத்தின் நடவடிக்கைகள் சம்பந்தமாக 2017 ஆம் ஆண்டிற்கான பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | i நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படாமை |
| | ii தொடக்க கணக்கேடுகளும் பதிவேடுகளும் முறையாகப் பேணப்படாமை. |
| (ஆ) வருமானம் | பெறுவனவுகளுக்கான பற்றுச்சீட்டுக்கள் இலக்க ஒழுங்கின்படி வழங்கப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| (இ) பதிவேடுகளைப் பராமரித்தல் | நட்டங்கள் மற்றும் சேதங்கள் சம்பந்தமாக பதிவேடு பேணப்பட்டிருக்காமை. |
| (ஈ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள் | நீண்டகாலமாக அறவீடு செய்யப்படாத மற்றம் தீர்த்து வைக்கப்படாத மீதிகள் காணப்படுகின்றமை. |
| (உ) சொத்துக்களின் பயன்பாடு | பயன்படுத்தப்படாத சொத்துக்கள் காணப்படுகின்றமை |